**சுருக்கம்**

தொழில் நுட்பக் கல்வித் துறை – 2011–2012 ஆம் ஆண்டில் அரசினர் பொறியியல் கல்லூரிகள், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசினர் சிறப்புப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் பொது மாறுதல் அளித்தல் – நெறிமுறைகள் நிர்ணயித்திடல் மற்றும் இடமாற்றம் குறித்த கலந்தாய்வு நடத்திக் கொள்ள தொழில் நுட்பக் கல்வி ஆணையருக்கு அதிகாரம் வழங்கி ஆணைகள் வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வித் (சி2) துறை

அரசு ஆணை (1டி) எண்.149 நாள்: 08.08.2011

ஆடி–23,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டவை:

1. அரசு ஆணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 07.01.1994.
2. அரசு கடித எண்.23847/எஸ்/1998–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 05.08.1998.
3. அரசு கடித எண்.5304/எஸ்/2010–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 13.4.2010.
4. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடித எண்.22443/ டி2/2011, நாள் 17.6.2011.

------

**ஆணை**

அரசுப் பணியாளர்களுக்கான பொதுமாறுதல் சம்பந்தமான வழிகாட்டு நெறிமுறைகள் அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, 7.1.94 நாளிட்ட அரசாணையின் மூலம் வெளியிடப்பட்டு அரசு கடித எண்.23847/S/1998–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 05.08.1998–ன்படி மறு வெளியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், அரசு கடித எண்.5304/எஸ்/2010–1, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 13.4.2010–ன்படி பொது மாறுதல்களுக்கு 1999ம் ஆண்டு முதல் இருந்து வரும் தடையாணை 2010–11ஆம் ஆண்டுக்கும் நீட்டிக்கப்பட்டது என்றும் அரசினர் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக் ஆசிரியப் பணியாளர்களுக்கு பணியிட மாறுதல்களுக்கான கலந்தாய்வு குறித்து ஒவ்வொரு ஆண்டும் அரசாணை வெளியிடப்படுகிறது என்றும் மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதே போன்று தொழில் நுட்பக் கல்வித் துறையைச் சேர்ந்த ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் பொதுமாறுதல் அளிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

2. 2011—2012ஆம் ஆண்டிற்கு அரசினர் பொறியியல் கல்லூரிகள் / அரசினர் பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் அரசினர் சிறப்புத் தொழில் நுட்பப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு கலந்தாய்வு மூலம் பணியிட மாற்றம் செய்யவும் அவ்வாறு பணியிட மாற்றம் செய்யும் போது சில நெறிமுறைகளை கடைபிடிக்கலாம் எனவும் அதனடிப்படையில் அனுமதி அளித்தும் அரசாணை வழங்கிட மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் கீழ்க்காணும் கருத்துருவினை தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அரசிற்கு அனுப்பியுள்ளார்:–

(i) இவை பணியாளர் இடமாற்றத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் மட்டுமேயாகும். பொதுநலன் கருதி எந்தவொரு ஊழியரையும் எப்பொழுது வேண்டுமானாலும் இடமாற்றம் செய்வதற்கு அல்லது குறிப்பிட்ட இடத்தில் பணிபுரிய அனுமதிப்பதற்கு இந்த ஆணைகள் எவ்வகையிலும் தடையாக இருக்க மாட்டா.

(ii) இவை இடமாற்றம் செய்யும் அலுவலர்கள் பின்பற்றுவதற்கான வழிகாட்டி முறைகள் மட்டுமேயாகும் என்பதால் இதன் அடிப்படையில் மட்டுமே எந்த ஒரு ஊழியரும் இடமாற்றம் பெறுவதற்கோ அல்லது குறிப்பிட்ட இடத்தில் பணிபுரிவதற்கோ உரிமை கோர இயலாது.

(iii) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்கள் பொது மாறுதலுக்கான மாறுதல் பருவமாக (Transfer Period) கருதி இடமாற்ற ஆணைகள் வழங்கப்பட வேண்டும்.

(iv) மாறுதல் கேட்டு வரும் விண்ணப்பங்கள் யாவும் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ள படிவத்தில் பதிவேடு ஒன்று தொடங்கி அதில் பதிவு செய்யப்பட வேண்டும் என்றும் விண்ணப்பம் பதிவு செய்யப்பட்ட விவரம், பதிவு எண் விவரத்துடன் உடனடியாக விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

3. <u>கலந்தாய்வு (Counselling) மூலம் மாறுதல்கள் வழங்கும் முறை:</u>

(i) ஒவ்வொரு ஆண்டும் சென்னை, தொழில் நுட்பக் கல்வி இயக்ககத்தில் பொது மாறுதல் கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியே கலந்தாய்வு நடத்தப்பட வேண்டும். கலந்தாய்வின்போது காலியிடங்களின் விவரம் மின்னணுதிரையில் வெளியிடப்படவேண்டும்.

(ii) கலந்தாய்வு நடைபெறும் நாளில் ஏற்கனவே காலியாக உள்ள பணியிடங்கள் மட்டுமே (Existing Vacancies) கலந்தாய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(iii) கலந்தாய்வுக்கான தேதி முடிவு செய்யப்பட்டு போதிய காலத்திற்கு முன்னதாகவே துறை அலுவலகங்கள் அனைத்திற்கும் அறிவிக்கை அனுப்பப்பட வேண்டும்.

(iv) ஏற்கனவே, உரிய வழியாக (through proper channel) விண்ணப்பம் அனுப்பி இயக்ககத்தில் உள்ள பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே கலந்தாய்வில் பங்கு பெறலாம்.

(v) பணியிட மாறுதல் கலந்தாய்விற்கு வருவோர் அவர்களது சொந்த செலவிலேயே வந்து செல்ல வேண்டும். மேலும் கலந்தாய்விற்கு வருவோர் அவர்களுக்கு தகுதியுள்ள விடுப்பிலேயே வந்து செல்ல வேண்டும்.

(vi) பொது மாறுதலுக்கான கலந்தாய்வு முடிந்தவுடன் அன்றே மாறுதல் உத்தரவுகள் வெளியிடப்பட வேண்டும்.

4. <u>மாறுதல் நெறிமுறைகள்:</u>

(i) ஒரு முறை சொந்த விருப்பத்தின் பேரில் மாறுதல் பெற்றவர் அடுத்த இரண்டு ஆண்டுகள் முடியும் வரை மீண்டும் சுய விருப்ப மாறுதல் கேட்கக் கூடாது.

(ii) ஒரு பணியாளர் மூன்று ஆண்டுகள் தற்போதுள்ள இடத்தில் பணி முடித்திருந்தாலும் அடுத்த இரண்டாண்டுகளுக்குள் வயது முதிர்வில் ஓய்வு பெறும் நிலையில் இருந்தால் அவரது விருப்பத்திற்கு மாறாக அவரை இடமாற்றம் செய்யக் கூடாது.

(iii) ஒரு குறிப்பிட்ட ஊழியர் மீது கடுமையான புகார் மனுக்கள் பெறப்பட்டு முதல்நிலை விசாரணையில் புகார்களில் சாரம் இருப்பதாக தெரிய வந்தால் (when prima-facie a case is made out) ஆண்டின் இடையில் எப்பொழுது வேண்டுமானாலும் அந்த ஊழியரை இடமாற்றம் செய்யலாம்.

(iv) அதுபோல ஒரு ஊழியர் பணியிடை நீக்கம் (Suspension) செய்யப்பட வேண்டிய நிலைக்கு முறைகேடுகளில் சம்பந்தப்பட்டு அவரை பணியிடை நீக்கம் செய்வதற்கு பதிலாக இடமாறுதல் செய்வதே போதுமானது என்று கருதப்படும் நிலையிலும் எப்பொழுது வேண்டுமானாலும் அவரை இடமாற்றம் செய்யலாம்.

(v) மகப்பேறு விடுப்பு முடிந்து ஓராண்டிற்குள் பணிக்கு திரும்பும் பெண் ஊழியர்களுக்கு அவர்கள் இடமாற்றத்திற்கு உரிய நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத நிலையில் அவர்களை இடமாற்றம் செய்யக் கூடாது.

(vi) ஒரு ஊழியர் தனது விருப்ப மனுவில் அதிகபட்சம் மூன்று இடங்களை முன்னுரிமை வரிசைப்படி (order of priority) குறிப்பிட்டு விண்ணப்பிக்கலாம்.

(vii) ஒரு ஊழியர் குறிப்பிட்ட இடத்திற்கு மாறுதல் கேட்டு பதிவு செய்த கோரிக்கைக்கு இடையில் அவர் பதவி உயர்வு பெற்றாலோ அல்லது இடமாறுதல் பெற்றாலோ அவரது கோரிக்கை செல்லாததாகிவிடும்.

(viii) விருப்ப மாறுதல் கோரும் போது தேவையான ஊரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் குறிப்பிட்ட பதவி/பிரிவு அல்லது அலுவலகம் கேட்டு விண்ணப்பித்தால் அதனை நிராகரிக்கலாம்.

5. <u>பொதுமாறுதல்:</u>

(i) பொது மாறுதலானது ‘A’, ‘B’ மற்றும் ‘C’ பிரிவுகளைச் சேர்ந்த தொழில் நுட்பக் கல்வித்துறை ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த இடமாறுதல்கள் மாறுதல் வழங்கும் அலுவலரின் அதிகார வரம்பு எல்லைக்குள் மட்டுமே செயல்படுத்தப்பட வேண்டும்.

(ii) ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்தவர்கள் இவ்வகையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் **1**–ஆம் தேதியன்று மூன்றாண்டு பணி முடித்தவர்கள் மாறுதலுக்கு பரிசீலிக்கப்பட வேண்டும். ஒரே இடத்தில் மூன்று ஆண்டுகள் என்பது அவர் தற்போது பணிபுரியும் ஊரை அடிப்படையாக வைத்து கணக்கிட வேண்டும். ‘C’ பிரிவு அலுவலர்களைப் பொறுத்தவரை ஒரே அலுவலகத்தில் இருக்கை மாற்றம் அல்லது ஒரே ஊரில் வேறு அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்வதே போதுமானது என்று கருதப்படும்.

(iii) ஒரு ஊழியருக்கு அவர் ஏற்கனவே பணிபுரிந்த இடத்தில் தண்டனை வழங்கப்பட்டிருந்தால் அவ்வாறு தண்டனை வழங்கப்பட்ட நாள் முதல் குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்கு மீண்டும் அதே ஊருக்கு மாறுதல் வழங்கக்கூடாது.

(iv) ஒருவர் விண்ணப்பித்த தேதியை அடிப்படையாகக் கொள்ளாமல் பரிசீலிக்கப்படும் நாளில் உள்ள தகுதியை வைத்தே மாறுதலுக்கான முன்னுரிமை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(v) பொதுவாக பதவி உயர்வு, பணி ஓய்வு, பணித்துறப்பு, புதிய பதவிகள் தோற்றுவித்தல் உள்ளிட்ட பிற காரணங்களால் பணியிட மாறுதல் அல்லாத பருவத்தில் ஏற்படும் காலியிடங்களை மாறுதல் பருவத்திலேயே (Transfer Period) நிரப்புதல் வேண்டும். எனினும் கோரிக்கையின் தகுதியை பரிசீலித்து இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, மூளை அறுவைச் சிகிச்சை மற்றும் புற்றுநோயாளிகள், ஊனமுற்றோர் (பத்தி 8ல் இனம் ii (அ) முதல் (ஊ) வரை குறிப்பிட்ட வகையினர்) ஆகியோருக்கு மாறுதல் அல்லாத பருவத்திலும் இடமாற்றம் வழங்கலாம்.

(vi) ஒரு குறிப்பிட்ட ஊரிலிருந்து வேறு இடத்திற்கு மாற்றம் செய்யப்படுவதற்கான தகுதிகளைப்பூர்த்தி செய்திருக்கும் ஒரு ஊழியர் அவராக மாற்றல் கேட்கும் இடத்திற்கு விருப்ப மாறுதல் அளிக்க இயலாத நிலையில் அவரை வேறு ஒரு ஊருக்கு மாறுதல் செய்வதற்கு தடையேதுமில்லை.

(vii) ஊட்டி, அறந்தாங்கி, எட்டையபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர் ஆகிய இடங்களில் செயல்படும் பாலிடெக்னிக் கல்லூரி மற்றும் பர்கூர் அரசு பொறியியல் கல்லூரியில் பதவி உயர்வின் காரணமாக பணியிடமாற்றம் / பணியிடம் அளிக்கப்பட்டால் அவ்விடங்களில் பணிபுரிய சில பணியாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். ஆகவே பதவி உயர்வு காரணமாக மேற்கண்ட இடங்களில் பணியிடம் அளிக்கப்பட்டால் அவ்விடங்களில் குறைந்த பட்சம் 1 வருட காலமாவது பணிபுரிய வேண்டும். மேலும், மேற்கண்ட ஊர்களிலுள்ள கல்லூரிகளில் மூன்றாண்டும் அதற்கு மேலும் பணிபுரியும் ஆசிரியரல்லாத அமைச்சுப் பணியாளர்கள் அவர்கள் பிற இடங்களுக்கு பணியிடமாற்றம் கேட்கும் பொழுது அவர்கள் விருப்ப மாற்றம் கோரும் இடங்களில் பணிபுரியும் தலமுதுநிலையில் உள்ள ஆசிரியரல்லாத அமைச்சுப் பணியாளர்களை மாற்றி அதனால் ஏற்படும் காலியிடங்களுக்கு மாறுதல் வழங்கலாம். அவ்வாறு தலமுதுநிலையில் உள்ள பணியாளர் ஏற்கனவே மேற்படி பயிலக கல்லூரிகளில் (ஊட்டி, பர்கூர், அறந்தாங்கி, எட்டையபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை மற்றும் திருவாரூர்) பணிபுரிந்திருப்பார்களேயானால் சுழற்சி அடிப்படையில் அவர்களின் முதுநிலை கணக்கிடப்பட்டு அவர்களை பணி மாறுதல் செய்யலாம்.

6. <u>மனமொத்த மாறுதல் (Mutual Transfers):</u>

(i) மனமொத்த மாறுதலைப் பொறுத்தவரையில் தற்போது பணிபுரியும் இடத்தில் குறைந்த பட்சம் ஓராண்டு பணி முடித்திருக்க வேண்டும்.

(ii) மனமொத்த மாறுதல்களைப் பொறுத்தமட்டில் ஆண்டின் இடையில் எப்பொழுது கேட்டாலும் பிற தகுதிகளை பூர்த்தி செய்திருப்பின் பரிசீலித்து ஆணை வழங்கலாம்.

(iii) மனமொத்த மாறுதல் கேட்பவரில் யாரேனும் ஒருவர் (அல்லது) இருவரும் முந்தைய பணியிடத்தில் தண்டிக்கப்பட்டிருந்தால் தண்டனை வழங்கப்பட்ட நாள் முதல் மூன்று ஆண்டுகள் முடிவதற்கு முன்னர் மாறுதல் வழங்க (அல்லது) கோரிக்கையை ஏற்கக் கூடாது.

(iv) மனமொத்த மாறுதலுக்கான விண்ணப்பம் சம்பந்தப்பட்ட இரண்டு அரசு ஊழியர்களிடமிருந்தும் இயக்ககத்தில் கிடைத்த பின்னரே பதிவு செய்யப்பட்டு பதிவு எண் வழங்கப்படும்.

7. <u>விருப்ப மாற்றல் (Request Transfers):</u>

(i) விருப்ப மாறுதல் கேட்கும் ஊழியர் தற்போது பணிபுரியும் இடத்தில் குறைந்தபட்சம் ஓராண்டு பணிக்காலம் முடித்த பின்னரே விருப்ப மாறுதலுக்கு விண்ணப்பம் அளிக்க இயலும்.

(ii) ஒரு காலிப் பணியிடத்திற்கு ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் விண்ணப்பித்திருந்தால் கீழ்க்காணும் முன்னுரிமை அடிப்படையில் மாறுதல் வழங்கப்பட வேண்டும்:–

அ. இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை, மூளை அறுவைச் சிகிச்சை மற்றும் புற்று நோயாளிகள்;

ஆ. மூன்று சக்கர வண்டியில் பயணம் செய்யும் அளவிற்கு ஊனமுற்றோர் மற்றும் இரண்டு கால்களும் பாதிக்கப்பட்டு ஊன்றுகோல் உதவியுடன் நடமாடும் நிலையில் உள்ளோர்

இ. இராணுவ ஊழியர்களின் கணவன்/மனைவி

ஈ. கணவன், மனைவி ஒரே இடத்தில் பணியில் இருப்பவர்கள்

உ. விதவைகள் மற்றும் 40 வயதான முதிர் கன்னியர்

ஊ. மனவளர்ச்சி குன்றிய குழந்தையின் பெற்றோர்

(iii) மேற்சொன்ன முன்னுரிமையில் ஒன்றிற்கு மேற்பட்டவர்கள் மாறுதல்கள் கோரியிருப்பின், அன்னார் தற்போதுள்ள பணியிடத்தில் பணிபுரியும் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அதிக காலம் பணிபுரிந்தவருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

(iv) மூன்று சக்கர வாகனத்தில் பயணிக்கும் ஊனமுற்ற ஊழியர்கள், இரண்டு கைகளுக்கும் ஊன்றுகோல் பயன்படுத்தும் ஊனமுற்றோர் மற்றும் கணவன் மனைவி ஒரே இடத்தில் பணிபுரிய அனுமதிக்க வேண்டும்.

(v) கணவன், மனைவி இருவரும் ஒரே இடத்தில் 5 ஆண்டுகள் பணிமுடித்த பின்னர் இருவரும் சேர்ந்து ஒரே ஊருக்கு பணியிட மாற்றம் கேட்டால் அவர்கள் இருவரது கோரிக்கையும் முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கலாம்.

(vi) தற்போது பணிபுரியும் இடத்திற்கு முன்னர் கடைசியாக பணிபுரிந்த இடத்திற்கே (To the immediate previous station) மூன்றாண்டுகளுக்குள் மீண்டும் இடமாற்றம் கேட்டால் அத்தகைய கோரிக்கையை ஏற்கத் தேவையில்லை (மேலே பத்தி 7 (ii)–ல் (அ) முதல் (ஊ) வரை குறிப்பிட்டுள்ள இனங்களைத் தவிர).

8. தொழில் நுட்பக் கல்வி ஆணையர் இத்துறையில் காலியாகவுள்ள பதவிகள் மற்றும் நிரப்பப்பட்ட பதவிகளின் விவரங்கள் மற்றும் பணியிட மாறுதல் கேட்டு அளித்தவர்களின் விவரங்கள் குறிப்பிட்டு அரசுக்கு அனுப்பியுள்ளதுடன், 2011–2012ஆம் ஆண்டிற்கு ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கு கலந்தாய்வு முறையில் இடமாறுதல் செய்ய வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிடுமாறும், மேலும் நடப்பு ஆண்டில் கலந்தாய்வு மூலம் இடமாறுதல்களை ஜூன் 2011 வரை கால நீட்டிப்பு அளிக்குமாறும் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

9. தொழில் நுட்பக் கல்வி ஆணையரின் மேற்கண்ட கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. அரசாணை (நிலை) எண்.10, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 07.01.1994 மற்றும் அரசு கடித எண்.23847/எஸ்/1998–1, நாள் 05.08.1998 மற்றும் 5304/எஸ்/2010–1, நாள் 13.4.2010ல் உள்ள வழிகாட்டுதல்களை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் தொழில் நுட்பக் கல்வித்துறை சார்ந்த அரசினர் பொறியியல் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்களில் பணிபுரியும் ஆசிரியரல்லாத பணியாளர்களின் மாறுதல் குறித்த கலந்தாய்விலும் மேலே பத்தி 2 முதல் 8 வரை குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளையும் பின்பற்றப்படல் வேண்டும் என்பதுடன், இக்கல்வியாண்டு மட்டும் (2011–2012) தனிநேர்வாக ஆசிரியரல்லாத பணியாளர்களின் மாறுதல்களுக்கான கலந்தாய்வினை ஆகஸ்ட் 2011–க்குள் முடித்துக் கொள்ள தொழில் நுட்பக் கல்வி ஆணையரை கேட்டுக் கொள்ளலாம் என முடிவெடுத்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

10. மேற்கண்ட இடமாறுதல் நெறிமுறைகள் குறித்து உடனடியாக தக்க மேல் நடவடிக்கை எடுக்குமாறு தொழில் நுட்பக் கல்வி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா.கண்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொழில் நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
நகல்:–
முதலமைச்சரின் செயலாளர், சென்னை–9.
உயர்கல்வி அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் (ஐ/பி/ஜெ/எப்/ஜி) துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச்சீர்திருத்தத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்